# இஸ்லாமிய மயமாக்கமும் பொருளாதார நடவடிக்கைகளும் : சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் விசேட ஆய்வு

**M. Nusrath banu**

468/b, moongilady road, sammanthurai, srilanka.

mnusrathbanu1@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதவை ஜீவனோபாயத் தேவைக்காக பொருளீட்டுவது பிரதானமான ஓர் அடிப்படையாகும். இவ்வாறு சம்மாந்துறைப் பிரதேசத்தில் பெரும்பாலும் கைத்தொழில், பண்ணை வளர்ப்பு, விவசாயம், வியாபாரம் என்பனவே காணப்படுகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் குறித்து பல ஆய்வுகள் ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் அதனை எவ்வாறு இஸ்லாமிய மயப்படுத்துவது என்பது குறித்த அறிவு மக்களிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. இவ் இடைவெளியினை இந்த ஆய்வு பூரணப்படுத்துகின்றது.

நோக்க மாதிரியின் அடிப்படையில் 420 குடும்பங்களில் இருந்து 42 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு, நேர்காணல், இலக்குக் குழுக் கலந்துரையாடல், அவதானிப்பு முறை மூலம் முதலாம் நிலைத்தரவுகளும், புத்தகங்கள், இணையத்தள புத்தி ஜீவித்துவ கட்டுரைகள் மூலம் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் கண்டுபிடிக்கப்பட்ட விடயம் என்னவெனில் ஆய்வுப் பிரதேச மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஹலால், ஹறாம் பேணுவதில் ஆர்வம் கொண்டவர்களாக இருந்த போதிலும் அது குறித்த இஸ்லாமிய மயமாக்க அறிவு சமூக மட்டத்தில் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது.

இதனை நிவர்த்தி செய்வதன் மூலம் பூரணமாக இதை திருப்தி பெற்ற ஓர் சமூகக் கூட்டாக ஆய்வுப் பிரதேச மக்கள் திகழ்வார்கள் எனலாம். மேலும் இறுதியில் மேற்குறித்த இஸ்லாமிய நடைமுறைகளை இஸ்லாமியப்படுத்துவதற்கான சில பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**key words:** ஜீவனோபாயம், ஹலால், ஹறாம், இஸ்லாமியத்துவம், உற்பத்திப்பொருளாதாரம்

**அறிமுகம்**

தனிநபர்களின் கூட்டையே சமூகம் என்ற பொதுப்பெயரில் அழைப்பர்.ஒரு சமூகம் கூட்டமாக வாழ்வதாயின் அதில் அங்கம் வகிக்கும் தனிநபர்களின் முன்னேற்றம் கருத்திக்கொள்ளப்படும் என்பதும் யாம்மறிந்த விடயமே.அதிலும் குறித்த பிரதேசத்தின் கல்வி,கலாசார,பொருளாதார நிலை பெரிதும் நோக்கப்பட வேண்டியது என்பதை சமூகத்தில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு தனிநபரும் உணர்ந்திருப்பர்.

இந்த ஆய்வில் ஒரு சமூகத்ததிதன் உயர்ந்த தரத்தினை வெளிப்படுத்தும் பொருளாதாரம் தொடர்பான சில விடயங்களைக் காணலாம். அதாவது சமூகத்தின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு தொழிலொன்றை மேற்கொள்வதானது வாய்ப்பாக அமையும்.படித்த சாரார் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்வதனூடாக குறித்த பொருளாதாரத்தை திரட்டி, தமது வாழ்வை நடாத்தி செல்ல முடியும்.மற்றுமொரு சாரார் தன்னிடம் காணப்படும் ஏனைய திறமைகள் மற்றும் வசதிகளின் அடிப்படையில் வேறு சில தொழில் முயற்சிகளில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும்.அதனூடாகவே தமது ஜீவனோபாய விடயங்களைக் கவனிப்பர்.அந்த வகையில் தொழில்களாக மேற்கொள்ளப்படும்

சில விடயங்கள் தொடர்பாக இஸ்லாத்தின் கண்ணோட்டத்தையும், அவற்றில் இஸ்லாத்திற்கு முரணாக இடம்பெறும் விடயங்ககள் தொடர்பாகவும் நோக்குவோம்.

**ஆய்வுப் பிரச்சினை**

தமது பொருளாதாரத்தை மேம்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்படும் தொழிலல்களான வியாபாரம், பண்ணை வளர்ப்பு, விவசாயம், கைத்தொழில் போன்றவற்றில் இஸ்லாத்திற்கு முரணான சில விடங்கள் இடம்பெறுகின்றன.அதாவது வட்டி, ஒத்தி பிடித்தல், இஸ்லாத்திற்கு முரணான சில விடயங்களை உற்பத்தி செய்தல் என்பவற்றைக் கூறலாம்.இவை இஸ்லாம் தடுத்தவையாக இருக்கையில் மேற்கொள்ளப்படும் தொழிலும் ஹராமானதாக மாறுவதுடன் அதன் விளைவாகப் பெரும் ஊதியமும் ஹராமானதாகவே அமையும்.அவ்வாறாயின் குறித்த தொழிலை மேற்கொள்ளும் மனிதனின் அனைத்து செயற்பாடுகளும் பிழையான விளைவையே ஏற்படுத்தும்.எனவே இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

குறித்த பிரதேசத்தில் பொருளாதார மேம்பாட்டிற்காக மேட்கொள்ளப்படும் குறித்த தொழில்களில் இடம்பெரும் இஸ்லாத்திற்கு முரணான விடயங்களை நீக்கி, அவற்றை இஸ்லாமிய வரையறைகளுக்குள் மேற்கொள்வதினூடாக ஒரு சிறப்பான சமூக வளர்ச்சிக்கான அடிப்படைகளை இறைவனின் பொருத்தத்துடன் அமைத்துக் கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு பண்பு ரீதியான ஆய்வு முறை (Qualitative research meathod) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது ஒரு சமூக விஞ்ஞான ஆய்வு என்ற அடிப்படையில் கள ஆய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வு முதலாம் நிலைத்( primary data) தரவுகளை பிரதான மூலகமாகவும் ஏனைய தரவுகள் இரண்டாம் நிலைத்( secondery data) தரவுகளாகவும் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இங்கு நோக்க மாதிரி எடுப்பு (purposive sample method) உபயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. வினாக் கொத்து( quetionnaire), நேர்காணல்( interview), இலக்குக்குழு கலந்துரையாடல்( FGD), அவதானம்( Direct observation) என்பன மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தின் 480 குடும்பங்களில் 10% இனை நேர்காணலுக்காக தெரிவு செய்ததில் கட்டமைக்கப்படாத வினாத் தொகுதியினை( Un structured questionnaire) உள்ளடங்கிய 48 நேர்காணல் இடம் பெற்றது. இரண்டாம் நிலை தரவுகளாக பிரதேச செயளாளர் அறிக்கை, பண்பாட்டுத் தொடர்பான சஞ்சிகைகள், பத்திரிகைகள், நூல்கள், இலத்திரினியல் வெளியீடுகள், இலக்கியக் கட்டுரைகள், புலமையாளர்களின் ஆக்கங்கள்(scolar Artical) மூலம் சேகரிக்கப்பட்டு ms -word மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

மட்டக்களப்புத் தரவை என ஆரம்பத்திலும் 1700இற்குப் பிறகு சம்மாந்துறை எனவும் பிரபல்யமடைந்த, முழு இலங்கைத் தீவிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பழம் பெரும் பிரதேசம் எமது ஊர் சம்மாந்துறையாகும். மட்டக்களப்புத் தரவை எனும் பெயர் வரக் காரணம் ஜெய்லானியிலிருந்து கடல் மார்க்கமாகக் கப்பலொன்று வந்தடைந்தபோது அவர்களுக்கு

மட்டக்களப்புத் தரவை காசிம் என்பவர் குடிக்கக் கொடுத்ததால் இப்பெயர் வந்ததாக ‘‘சாஹுல் ஹமீது ஒலியுல்லாஹ் கல்முனை வந்த கதை’’ என்ற பாடல் எடுத்தியம்புகின்றது. இன்னும் தென்னிந்திய வர்த்தகர்கள் தங்களுடைய ‘‘சம்பன்’’ என்ற வள்ளங்களை இங்கு வந்து நங்கூரமிட்டதன் காரணமாகக் காலப் போக்கில் சம்மாந்துறை எனப் பெயர் பெற்றதாயும், வயல் நிலங்கள் சூழப்பெற்ற ஓரிடம் என்பதால், இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சம்பா நெல் ஏற்றுமதி செய்யப்பட்ட காரணத்தினால் சம்பாதுறை என அழைக்கப்பட்ட எமது ஊர் ‘‘சம்மாந்துறை’’ என காலப்போக்கில் அழைக்கப்பட்டது.

இன்னும் பொலன்னறுவை மன்னன் இரண்டாம் விக்ரமபாகு ஆட்சிக் காலத்தில் இங்கு வந்த முகையதீன் ஆண்டவர் தனது வாய் பேச முடியாத மகன் இரண்டாம் விஜயபாகுவிற்கு இவ்வூரில் உள்ளோர் வைத்தியம் செய்தமையால் அவரின் பெயரில் ‘‘முகையதீன் பள்ளி’’ என்ற சம்மாந்துறையில் முதல் பள்ளி வாயலை நிறுவியதாகவும் வரலாறு கூறுகின்றது. ஆக, பரப்பிலும், அடிப்படைப் பொருளாதார வளத்திலும் கல்வியிலும் விவசாய அபிவிருத்தியிலும் போக்குவரத்திலும் மேம்பட்ட ஒரு சிறப்பான பிரதேசமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சம்மாந்துறையின் கிழக்கில் வயல் வெளிகளும், மாவடிப்பள்ளிக் கிராமமும் மேற்குப் பகுதியில் வீரமுனைக் கிராமமும் வடக்கில் வண்ணார் வட்டை, சேவகப்பற்றுக் கண்டம், அல்லைக்குளம் என்பனவும் தெற்கில் கருவாட்டுக்கல் பகுதிகளையும் பரப்பெல்லையாகக் கொண்டுள்ளது. 1950ஆம் ஆண்டுக்கு முன் சனத்தொகையில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் 88 தமிழ் மக்கள் 12 வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால், தற்போது முஸ்லிம்கள், தமிழர்கள் உட்பட பறங்கியரும், சிங்களவர்களும் குறிப்பிட்ட சதவீதத்தில் வாழ்கின்றனர். தற்போது சம்மாந்துறைப் பிரதேசத்தின் 51 பகுதிகளில் 35302 ஆண்களும், 35977 பெண்களும் மொத்தம் 71279 பேர் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.இன்னும் சம்மாந்துறையில் வருமானம் ஈட்டக்கூடிய முக்கிய தொழிலாக ஆரம்ப காலத்தில் விவசாயம் காணப்பட்டது.

கல்வி நடவடிக்கைகளை நோக்குகையில் ஆரம்பத்தில் 5 பாடசாலைகள் பிரசித்தி பெற்றுக் காணப்பட்ட போதிலும் தற்போது 64 பாடசாலைகள் காணப்படுவதுடன் அவற்றின் விளைவுகளாகத் திறமை மிக்க மாணவர்கள் உருவாகி ஊரில் பல சேவைகளையும் செய்கின்றனர். மேலும், மார்க்க விடயங்களைத் தொடர்ந்தும் சிறப்பாக மேற்கொள்ள 7 ஜும்ஆப் பள்ளிவாயல்கள் உட்படப் பல பள்ளிவாயல்கள் காணப்படுகின்றமை விஷேடமாகும். இன்னும் ஆரம்ப காலங்களில் ஆண்களும், பெண்களும் தமக்கேயுரிய சில விளையாட்டுக்களைப் பொழுதுபோக்கிற்காகக் கோஷ்டியாகச் சேர்த்து விளையாடுவர்.தொடர்ந்தும் சம்மாந்துறையைப் பொறுத்தவரை கணக்கன் கத்தர் குடி, மாமனார் போடி குடி, தேன் முதலி குடி, வெள்ளரசன் குடி, சங்கிதி குடி, இராசம்புள்ள குடி, சுல்தான் குடி போன்ற 25 குடிகள் இருந்ததாக வரலாறு கூறுக ின்றது. இவை ஒரு குடும்பத்தின் தலைமை தாங்கும் அமைப்பாக இருந்து வந்துள்ளதுடன், குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுமிடத்து இவர்களே தலைமை தாங்கி தீர்த்து வைப்பர்.

கலாசாரச் சிறப்புக்களின் அடிப்படையில் திருமணத்தை எடுத்து நோக்கினால் பெட்டி கொண்டு போதல், திட்டம் கட்டுதல், கேள்வி வட்டா, மருதோண்டி இடல், பந்த கால் நாட்டுதல், நாள் வட்டா போன்ற சம்பிரதாயங்களுடன் பல நாட்கள், மாதங்கள் இடம்பெறும். இன்னும் காரியங்கள் நிறைவேற, சுகவீனம் போன்ற காரியங்களுக்கு நேர்த்திக்கடன் வைப்பது, கபூர்ஸ்தானங்களுக்கு நேர்ந்து அனுப்புவது போன்ற மூடப்பழக்கவழக்கங்களைக் கொண்டும் இருந்தனர். ஆனால், தற்போது அவை குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.இன்னும் அக்காலத்திலிருந்தே பெருநாட்களைச் சிறப்பாக

அனைவரும் சேர்ந்து கொண்டாடி இருப்பதுடன், பல வேலைகளைச் செய்யும்போது களைப்பு நீங்க தமக்கேயான நாட்டார் பாடல்களையம் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்வேறு சுவாரஸ்யமான விடயங்களைத் தன்னகத்தே கொண்டு, இயற்கையை அழகிற்காகச் சூழக் கொண்ட பாரிய பிரதேசமே சம்மாந்துறைப் பிரதேசமாகும்.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

ஆய்வுப் பிரசேத்தில் அரச, அரச சார்பற்ற தொழில்களில் ஈடுபடும் மக்கள் காணப்படுகின்றனர். பொதுவாக இஸ்லாத்தின் பார்வையில் ஹலால், ஹறாம் பேணப்படும் போது எத் தொழிலாக இருந்தாலும் அது பூரணத்துவமடைகின்றது. எனினும் ஆய்வுப்பிரதேசத்தின் சில மக்களுக்கு தமது தொழில்களை இஸ்லாமியமயப்படுத்தல் தொடர்பாக தெளிவின்மை நிலவுகின்றது. அவை குறித்து பின்வருமாறு நோக்கலாம்.

**1. கைத்தொழில்**

எமது ஆய்வுப் பிரதேசத்தில் ஆடை தைத்தல்,கைப்பணிப் பொருட்கள் தயாரித்து சந்தைப்படுத்தல்,நொருக்குத் தீனிகள் உற்பத்தி செய்து விற்றல்,வீடுகளில் சமைத்துக் கொடுத்தல் முதலியன கைத்தொழிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

இஸ்லாத்தை பொருத்தவரையில் எந்தவொரு விடயத்தின் அடிப்படையிலும் ஹலாலான,குர்ஆன் சுன்னாவிற்கு முரணாகாத விடயமாக இருப்பதுவே அதிகம் கவனத்திற் கொள்ளப்படும் விடயமாகும்.குறிப்பாக ஒரு மனிதன் தனது வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் முகமாக குர்ஆன்,சுன்னாவின் வரையறுக்குள் தமது உழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதே வழிகாட்டலாகும்.அந்த வகையில் ஒரு மனிதனால் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் இஸ்லாத்தின் பார்வையில் எவ்வாறான இடத்தைப் பிடிக்கின்றன என்பதை நோக்கலாம்.

ஒரு முறை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களிடம் ஒருவர் வந்து ''நான் கைத்தொழில்களின் மூலமே எனது பிழைப்பை நடத்தி வருகிறேன்.நான் உயிர் இனங்களின் படங்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறேன்.இது சரியானதா?பிழையானதா?'' என வினவ ''உருவம் சமைக்கும் ஒருவன்,தான் சமைத்த உருவத்திற்கு உயிர் கொடுக்கும் வரை அல்லாஹ் அவனுக்க தண்டனையளிப்பான்'' என றஸுலுல்லாஹ் கூறியதாகக் கூறினார். இன்னும் '' நீர் இந்த தொழிலையே செய்ய நினைத்தால் மரங்கள் மற்றும் உயிரற்ற பொருட்கள் ஆகியவற்றின் உருவங்களை வேண்டுமானால் செய்து கொள்.'' என வழிகாட்டினார்கள்.இன்னும் நபியவர்களின் காலத்தில் சலவைக்கல் வெட்டுதல், தோல் பதனிடல் போன்றவற்றையும் மேற்கொண்டனர்.

இவற்றை நோக்கினால் தையல்,நெசவு,ஆடம்பரமற்ற பொருட்களின் உற்பத்தி,உணவுப் பொருள் தயாரித்தல் என்பன மூலம் தமக்குரிய செலவுகளுக்கான பணத்தை சம்பாதித்துக்கொள்ள முடியும்.ஆனால் அவற்றில் பிறருக்கு தீங்கு விளைவிக்கும் அல்லது இஸ்லாத்திற்கு மாற்றமான எந்த விடயங்களும் இடம்பெறக் கூடாது.

**2. பண்ணை வளர்ப்பு**

எமது ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலும் கோழி, ஆடு, மாடு, முயல், புறா,காடா முதலியவற்றை வியாபார நோக்கில் வளர்ப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது.

விலங்குகள் தொடர்பாக இஸ்லாம் பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அவற்றிற்குரிய உரிமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டுமெனவும்,அவற்றிற்குரிய உணவு,நீர் போன்றவற்றை வழங்கும் படியும்,அவற்றைத் துன்புறுத்தாது அவற்றின் மீது சவாரி செய்யும் படியும் வழிகாட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று நபிமார்களும்,ரஸுல்மார்களும்,பின்னைய ஸஹாபாக்களும் கூட இவ்வாறான பண்ணை வளர்ப்புகளில் ஒன்றான ஆடு மேய்ப்பினை மேற்கொண்டதாயும், அதனூடகவே தமது பல்வேறு ஆளுமைகளை வளர்த்துக் கொண்டதாயும் வரலாறு கூறுகின்றது.இதனை இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வினூடாகவும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இன்னும் அன்றைய காலம் தொட்டு மேற்கொள்ளப்படும் விவசாயத்திற்காகவும் ஆடு,மாடு போன்ற விலங்குகள் வள்ர்க்கப்பட்டதாயும் அறிய முடிகின்றது.இன்னும் ஸகாத் வழங்தும் பொருட்களிலும் கூட ஆடு,மாடு,ஒட்டகம் போன்ற விலங்குகள் கூறப்பட்டிருப்பதனை நோக்கும் போது பண்ணை வளர்ப்பின் வகிபாகத்தை அறியலாம். அதாவது 40 ஆடுகள் அல்லது 30 மாடுகள் அல்லது 5 ஒட்டகங்கள் மேலதிகமாக ஒரு நபரால் வளர்க்கப்படுமயின், ஒரு வருடம் பூர்த்தியான நிலையில் குறித்த நபரால் ஸகாத் கொடுக்கப்பட வேண்டும்.இன்னும் எவ்வாறான விலங்குகள் ஸகாத்தாக கொடுக்கப்பட முடியும் என்பது தொடர்பாகவும் இஸ்லாம் கூறுகின்றது.இன்னும் ரஸுலுல்லாஹ்வின் காலத்தில் ஆடு,மாடு,ஒட்டகம்,குதிரை போன்றன வளர்க்கப்பட்தற்கான சான்றுகளே அதிகமாக உண்டு.என்ற போதிலும் தற்காலத்தில் கோழி,வாத்து,புறா,முயல் மற்றும் இன்னும் சில விலங்குகள் விவசாயம்,உணவு,பாதுகாப்பு மற்றும் தொழில் நோக்கங்களுக்காக வளர்க்கப்படுகின்றது.இவை தொடர்பான பொதுவான சட்டம் அவற்றின் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்பதேயாகும்.

**3. விவசாயம்**

ஆய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலும் அனைவரும் வயல் நிலங்களின் சொந்தக்காரர்களாகவும், நிலத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்யும் தன்மை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.அரச தொழில் புரிவோரும் காணிகள் (வயல் காரர்) எனும் வயல்களைப் பராமரிப்பவரை கூலிக்கு அமர்த்தியும் வயல் காணிகளில் விவசாயம் செய்கின்றனர்.

ஒரு மனிதன் செய்யும் நிலையான தர்மங்களில் ஒன்றாகத்தான் பயிர்ச்செய்கையும் நோக்கப்படுகின்றது.அதிலும் குறிப்பாக விவசாயம் தொடர்பாகவும்,விளைநிலங்களை மற்றவருக்கு வழங்கி பயிர் செய்வது தொடர்பாகவும் சில நடைமுறைகளையும்,வழிகாட்டல்களையும்.இஸ்லாம் வழங்குகின்றது.

அதில் குறிப்பாக குத்தகை மற்றும் ஒத்தி போன்ற பதப்பிரயோகங்கள் பழக்கத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடியுமாயுள்ளது.அதாவது நில உரிமையாளர் தனது நிலத்தை இன்னொருவருக்கு வழங்கி அதனை பயிரிடச் செய்வதாகும்.இவ்வாறு பயிரிட்டு வரும் அறுவடையில் குறித்த பங்கினையே நில உரிமையாளர் ஊழியருக்கு வழங்குவார். அல்லது ஒருவருக்கு சொந்தமான நிலத்தில் இன்னும் சிலர் மூலதனம் இட்டு பயிர் செய்து அதனூடாக வரும் விளைச்சலினை குறித்த சதவீதத்தின் அடிப்படையில் பிரித்துக்கொள்வதாகும். இது சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்படாதவிடத்து சரியாக அமையும் என்பதாக இஸ்லாம் கூறுகின்றது.

அடுத்து ஒத்தி பிடித்தல் என்பதை ஒரு வகையான வட்டியாக நோக்கப்படுகிறது.அதாவது நிலத்தை பணயமாக வைத்து பணத்தை பெற்றுக்கொள்ளல்.அந்தப் பணத்தை திரும்பி கொடுக்கும் வரை பணம் கொடுத்தவர் நிலத்தின் மூலம் பூரண பயனைப் பெறுவார்.இதனை ஒருவகை வட்டியாகவும்,இதனைத் தவிர்ந்து நடக்கும் படியும் இமாம்கள் கூறுகின்றனர்.

இன்னும் விவசாயம் என்பது வெறுமனே தானிய உற்பத்தி மாத்திரமல்ல.மாறாக பழங்கள்,மறக்கறிகள் மற்றும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படும் விடயங்கள் அனைத்தையும் கூறலாம்.இவற்றிலும் ஸகாத் கடமைகள் உண்டு.அவர்களின் முயற்சிக்றேப்பவே அவை அறவிடப்படும்.

இன்னும் இவ்வாறான பயிர்ச்செய்கைகள் மற்றும் விவசாயம் மேற்கொள்ளல் என்பன இன்றைய சூழல் பாதுகாப்பு விடயத்தில் அதிகம் பங்களிப்பு செய்வதனைக் காணலாம்.

**4. வியாபாரம்**

ஆய்வுப் பிரதேசத்தின் சில மக்கள் வியாபாரம் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். பெரும்பாலும் சில்லறைக்கடைகளில் பெண்கள் வியாபாரம் செய்கின்றனர். மேலும் பாரிய வியாபார நடவடிக்கைகளையும் காணக் கூடியதாக உள்ளது.

இஸ்லாம் தமது வாழ்வாதாரத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டலில் பிரதானமாக கூறுவது வியாபாரத்தினைத் தான்.உழைப்புகளில் சிறந்தது பற்றி வினவிய போது ஹராம் கலக்காது,அல்லாஹ்வுக்காக மேற்கொள்ளப்படும் வியாபாரத்தினையே றஸுலுல்லாஹ் கூறினார்கள்.இன்னும் ஜாஹிலிய்யாக்கால மக்கள் வியாபாரத்திலே மிகவும் பிரசித்திபெற்றுக் காணப்பட்டமையை அல்குர்ஆனும்,ஸுன்னாவும் எடுத்தியம்புகின்றது.

இன்னும் வியாபாரத்தில் பொருட்களை விற்போரும்,வாங்குவோரும் அதிகம் கவனம் செலுத்தப்படுவர்.இன்னும் சிறந்த வியபாரிகள் மறுமையில் நபிமார்கள்,ஸாலிஹீன்களோடு எழுப்பப்படுவதாகக் கூறுவதிலிருந்து வியாபாரிகளின் கண்ணியம் நோக்கப்படுகிறது.

இன்னும் வியாபாரத்தில் பங்குடைமை,இணைந்து செயற்படல் மற்றும் பல வியாபார முறைகளை மனிதர்களின் இலகுக்கேற்ப இஸ்லாம் கடமையாக்கி அதனூடாகவும் உச்ச கட்ட விளைவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும், உயர்ந்த பலன்களை மனித சமூகம் பெற்றுக் கொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் விரும்புகின்றது.

அதற்காகத் தான் இஸ்லாம் வட்டியை ஹராமாக்கி,வியாபாரத்தை ஹலாலாக்கியுள்ளது. இதனூடாகவே அருளும் பறகத்தும் உள்ளதாயும் கூறுகின்றது.

**முடிவுரையும் பரிந்துரையும்**

ஆய்வின் அடிப்படையில் குறித்த தொழில்களில் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்வதினூடாக அவற்றை இஸ்லாமிய வரையறைகளுக்குள் மேற்கொள்ள முடியும்.

- விவசாயத்தில் ஒத்தி பிடித்தல் என்ற விடயத்தை கைவிடுவதுடன் இஸ்லாத்தின் தடுக்கப்பட்ட மற்றும் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்களை பயிர் செய்வதை விட்டும் தவிர்ந்திருத்தல்.
- வியாபாரத்தில் முழுவதும் வட்டியை தவிர்த்தல்.
- பண்ணை வளர்ப்பின் போது மிருகத்தை துன்புறுத்தல் போன்ற விடயங்களை தவிர்த்தல்.
- கைத்தொழிலில் இஸ்லாத்திற்கு முரணான உருவங்கள் மற்றும் பொருட்களை மேற்கொள்வதை தவிர்த்தல்.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை கவனம் செலுத்துவதனூடாக செய்யும் தொழில் மூலமான உச்ச கட்ட வெகுமதியை இம்மையிலும்,மறுமையிலும் பெறலாம்.

**References**


1. Abdulla, Rameez.(2001).*கிழக்கிலங்கைக் கிராமியம் : சமூக பண்பாட்டியல் ஆய்வு.* Colombo : Mallikaip pantal.
2. Ahamed,M.K. Seyyed. (1968*). முஸ்லிம் தமிழ்ப் பாரம்பரியம்.* Colombo: Arasu publication.
3. Ameen,C .M.A.(1996). *முஸ்லிம்கள் வளர்த்த அழகியல் கலைகள்.* Srilanka,Thihari: Reshma Publisher.
4. Ameen,M,I,M.(2009).*கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்.* ˙-1870-1915.islamic book house.colombo.
5. Ameen,M.I.M. *(History and culture of srilankan muslims with special reference to the period 1870-1915*. Peradeniya: university of peradeniya.
6. Arasaratnam, Sinnappah .(1964). *The muslims of Ceylon. In Ceylon*: new jersey prentice hall.
7. Asad, M.N.M. Kamil . (1988) . *some aspects of the political and commercial history of the muslims of sri lanka with special reference to the pritish period*. University of peradeniya.
8. Azeez, A.M.A. (1947). *The Ceylon moors*. Islamic zeylanica.
9. Bawa, Ahmadu . (1888). *The marriage customs of the moors of Ceylon*. Colombo:MICH Souvenir III
10. Blaze, L. E. (1946). *The moors of Ceylon*. Colombo: zahira college.
11. Cassim,P.T.M. (1948). *இலங்கை சோனகர்களின் சரித்திரம்.* Colombo.
12. Chandy, verghese. (1981). *The discipline of muslims in sri lanka* .Colombo: serendib.
13. Chitty, Simon,C. (1836). *An essay descriptive of the manners and customs of the moors of Ceylon*. Journal of the Ceylon branch.
14. De silva, S.F. (1949*). Islamic civilization*. Colombo: times of Ceylon press.
15. Dr.Shukri,M,A,M.(1986).*Muslims Of Srilanka*. Jamia naleemia. Srilanka.
16. Gananath Obeyesekere .(1975) *"Sinhalese Buddhist Identity in Ceylon" In Ethnic identity: Cultural continuities and Change ed.* George De Vos and Lola Romanucci-Ross (Chicago: The University of Chicago Press, , 231.
17. Goonewardene, K.W. (1959-60*). The history of the muslims in ceylon before the british occupation*. University of Ceylon: peradeniya.
18. Hassan, M.C.A. (1968*). Katharagama mosque and shrine*. Colombo: thauoos illustrations.

19. Hazari, H.J. (1914). *Some observations on the muslims of Ceylon*. Colombo.

20. Hussein, Asiff. (2007*). An ethnological study of the muslims of sri lanka*. Colombo: sarandib.